சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – குழந்தைகள் நலம் – மாற்று கருவறை தாய் மூலம் குழந்தைகள் பெறும் மாநில அரசு பெண் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பச்சிளம் குழந்தைகளை பராமரிப்பதற்காக 270 நாட்கள் குழந்தை பராமரிப்பு விடுப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை[சந.5(1)]த் துறை

அரசாணை (நிலை) எண்.44 நாள்: 29.07.2022

சுபகிருது, ஆடி 13

திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்க:

1. சட்டமன்ற பேரவையில் மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை) அவர்களால் 21.04.2022 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு.

மீண்டும் படிக்க:

2. சமூகப் பாதுகாப்பு இயக்குநர் அவர்களின் கடித எண்.5391/சாரா/2017, நாள் 02.05.2022.

******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அறிவிப்பில் மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை) அவர்களால் 2022–2023–ஆம் ஆண்டிற்கான சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மானிய கோரிக்கையின் போது 21.04.2022 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

"மாற்று கருவறை தாய் மூலம் குழந்தைகள் பெறுவது தற்போது அதிகரித்து வருகிறது. அவ்வாறு மாற்று கருவறை தாயின் மூலம் குழந்தைகளை பெறும் அரசு பெண் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு, பச்சிளம் குழந்தைகளை மிகுந்த கவனத்துடன் பராமரிப்பதுடன் அவர்களின் உடனடி தேவைகளை நிறைவேற்றுவதற்காக 270 நாட்கள் குழந்தை பராமரிப்பு விடுப்பு வழங்கப்படும்".

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு இயக்குநரின் கடிதத்தில், குழந்தைகளை தத்தெடுப்பு செய்யும் அரசு பணியாளர்களுக்கு 270

(த.பி.பா)

நாட்கள் தத்தெடுப்பு விடுப்பு வழங்கப்படுவதை போன்றே மாற்று கருவறை தாய் மூலம் குழந்தைகளை பெறும் அரசு பெண் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 270 நாட்கள் குழந்தை பராமரிப்பு விடுப்பு வழங்கிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. சமூகப் பாதுகாப்பு இயக்குநரின் கருத்துருவை நன்கு பரிசீலித்த அரசு அதனை ஏற்றும் அரசு பெண் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் 12 மாத மகப்பேறு விடுப்பு நிகழ்வில் காணப்படும் மகப்பேறு காலத்தில் ஏற்படும் உடல் திறன் இழத்தல் மற்றும் தேறுதல் போன்ற சிரமங்கள், மாற்று கருவறை மூலம் குழந்தைகளை பெறும் அரசு பெண் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நேர்வதில்லை என்பதனை கருத்தில் கொண்டும், மாற்று கருவறை தாய் மூலம் குழந்தைகளை பெறும் அரசு பெண் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு, பச்சிளம் குழந்தைகளை மிகுந்த கவனத்துடன் பராமரிக்க ஏதுவாக தத்தெடுக்கும் பெற்றோர்களுக்கு வழங்கப்படும் தத்தெடுப்பு விடுப்பிற்கு நிகராக மாற்று கருவறை தாய் மூலம் குழந்தைகளை பெறும் அரசு பெண் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 270 நாட்கள் குழந்தை பராமரிப்பு விடுப்பு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கி ஆணையிடுகிறது.

**நிபந்தனைகள்:-**

1. இவ்விடுப்பு அரசு மற்றும் அரசு சார்ந்த அனைத்து நிறுவனங்களில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்கும் பொருந்தும்.
2. மாற்று கருவறை தாய் மூலம் குழந்தை பெறுவதற்கான ஒப்பந்தத்தை சட்ட ரீதியாக பதிவு செய்து இருத்தல் வேண்டும்.
3. குழந்தை பிரசவித்த மருத்துவரிடமிருந்து பெறப்பட்ட மருத்துவ சான்றிதழ் அடிப்படையில் விடுப்பு வழங்கப்பட வேண்டும்.
4. மாற்று கருவறை தாய் மூலம் குழந்தைகளை பெறும் அரசு பெண் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு, அக்குழந்தை பிறந்த நாளிலிருந்து விடுப்பு வழங்கலாம்.
5. இவ்விடுப்பு இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷம்பு கல்லோலிகர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

சமூகப் பாதுகாப்பு இயக்குநர், சென்னை-10.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள்/
அனைத்து துறைத் தலைவர்கள்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்

செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை–3.
(சமூகப் பாதுகாப்பு இயக்குநரகம் வழியாக)

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலரின் முதுநிலை
தனிச் செயலாளர், சென்னை–9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை–9.
நிதி (சந) துறை, சென்னை–9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின்
அனைத்து அலுவலர்கள்/அனைத்து பிரிவுகள்,
சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/7/2022
பிரிவு அலுவலர்
29.7.22